# Tamil Youth Rally Support at Labour Party’s Fundraising Dinner



A passionate group of Tamil youths recently attended a fundraising dinner organized by the British Labour Party’s election campaign. During the event, they seized the opportunity to engage with visiting Labour Party MPs and prominent political figures, voicing their demand for a British ban on Shavendra Silva, the Sri Lankan army commander accused of genocide. Their aim was to urge the attendees to take action with the British government in addressing

this critical issue.



In April 2021, the International Truth and Justice Project (ITJP), led by Yasmin Sooka, presented substantial evidence to the British Foreign Office, calling for a ban on Shavendra Silva. Silva had commanded the 58th Division during the final war in Sri Lanka, and this division was held responsible for the deaths of numerous innocent Tamil individuals.




Regrettably, no action has been taken by the British Foreign Office thus far. Consequently, the youth group and survivors of torture have been actively conducting a series of meetings with British Members of Parliament. They have garnered support from lawyers, human rights activists, and second-generation Tamil individuals, all of whom are diligently exerting pressure on the parliamentarians.

During the fundraising dinner held on July 4, a group of impassioned youths engaged with prominent figures of the British Labour Party, utilizing the occasion as a platform to campaign against Shavendra Silva. The Shadow Minister of External Affairs, Hon. David Lammy, addressed this matter in his speech, expressing the Labour Party’s awareness of the challenges faced by the Tamil Sri Lankan people. He further assured the audience that, if elected as Foreign Secretary in the upcoming election, the Labour Party would instil confidence in the community and safeguard their welfare.




The campaign to ban Shavendra Silva also received support from notable individuals such as Rose Carrot, leader of Merton Council, Mike Brunt, Mayor of Collierswood, Merton Councillor Carolyn Cooper, and Stephen Alambridis, another Merton councillor, who held a banner proclaiming “Ban Shavendra Silva.”




It is worth highlighting that the head of Tamils for the Labour Party, Mr. Sen Kandiah, led this campaign, with activists Mohamed Nifras Mohamed Nawfer, Vijay Vivegananthan , Nishanthan Nithiyananthan, Amalraj Jayakumar, Thevarasa Kajan, Kanagasabapathy Karthigesan, Manoj Prasanna, Vaheesan Visagaratnam, Ronistan Antonys Uthajakumaran, Rajasekar Ramakrishnan, Saseeskanna Nadarajah, Senavirathna Bandara, Nagarathnam Sandilyan and Vithura Vivegananthan playing instrumental roles. This accomplishment marks another significant victory for the determined youth leading the charge.


SANCTION
SHAVENDRA
SILVA


vote
SILVA


vote
SILVA


SANCTION
SHAVENDRA
SILVA


SANCTION
SHAVENDRA
SILVA


SANCTION
SHAVENDRA
SILVA




பிரித்தானிய தொழில்க்கட்சியினரின் தேர்தல் பிரச்சார நிதி சேகரிப்புக்கான இரவு விருந்து ஒன்று கூடலில் கலந்துகொண்ட தமிழ் இளையோர் அணி அங்கு வருகை தந்திருந்த தொழில் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்களிடம் இலங்கை இராணுவ தளபதியும் இனப்படுகொலை குற்றவாளியுமாகிய சவேந்திர சில்வாக்கு எதிராக பிரித்தானிய தடை விதிக்க வேண்டும் என்ற தமது கோரிக்கையை எடுத்து விளக்கியதுடன், பிரித்தானிய அரசு உடன் நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்துமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கையில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தில் பல்லாயிரம் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு காரணமான 58வது படைப்பிரிவிற்கு தலைமை தாங்கி இராணுவத்தை நேரடியாக வழிநடத்திய சவேந்திர சில்வாவை தடை செய்ய போதுமான ஆதாரங்களை யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டம் (ITJP) கடந்த ஏப்ரல் 2021 இல், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்கு சமர்ப்பித்திருந்தது.

ஆனால் இதுவரையில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சால் எவ்வித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் பிரித்தானியாவின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் இது தொடர்பிலான தொடர் சந்திப்புகளை இளையோர் அணி மற்றும் சித்திரவதையில் தப்பித்தவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இதில் தமிழர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் இரண்டாம் தலைமுறை என பலர் கலந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தங்களை வழங்கி வருகின்றனர்.

இந்த வகையிலே ஜூலை 4 ஆம் திகதி நடைபெற்ற பிரித்தானிய தொழிற் கட்சியின் தேர்தலுக்கான நிதி சேகரிப்பு இரவு விருந்து ஒன்று கூடலில் கலந்து கொண்ட தொழிற் கட்சியின் முக்கிய பிரமுகர்களை சந்தித்த இளையோர் அணி அதனை சவேந்திர சில்வாவுக்கு எதிரான பிரச்சாரத்துக்கான களமாக பயன்படுத்திக்

கொண்டனர்.

இந்த விடயம் நிழல் வெளிவிவகார அமைச்சர் கௌரவ. டேவிட் லாம்மி (Hon David Lammy- Shadow Foreign Affairs Minister) தனது உரையில், தொழிலாளர் கட்சி தமிழ் இலங்கை மக்களின் போராட்டங்களை அறிந்திருப்பதாகவும், அடுத்த தேர்தலில் அவர் வெளியுறவு செயலாளராக பதவியேற்றால், தொழிலாளர் கட்சி அவர்களுக்கு நம்பிக்கையை அளித்து அவர்களின் நலன் பேணப்படுவதை உறுதி செய்யும் என்றும் கூறினார்.

மேலும் மெர்டன் கவுன்சிலின் தலைவரான ரோஸ் கரோட்(Ross Garrod), மைக் ப்ரண்ட்(Mike Brunt) மேயர், கோலியர்ஸ்வுட்டில் இருந்து மெர்டன் கவுன்சிலர் கரோலின் கூப்பர் மார்பியா(Caroline Cooper Marbiah), மெர்டனின் கவுன்சிலரான ஸ்டீபன் அலம்பிரிடிஸ்(Stephen Alambritis), சவுந்திர சில்வாவை தடைசெய்யவும் என்ற பதாகையை ஏந்தி சவேந்திர சில்வாவை தடை செய்யும் பிரச்சாரத்திற்கு ஆதரவு அளித்தனர்.

தொழிற்கட்சிக்கான தமிழர்கள் அமைப்பின் தலைவரான திரு. சென் கந்தையா அவர்களின் தலைமையில் செயற்பாட்டாளர்களான விஜய் விவேகானந்தன், வாகீசன் விசாகரெட்ணம், கனகசபாபதி கார்த்திகேசன், மொஹமட் நிஃப்ராஸ் மொஹமட் நவ்ஃபர், நிஷாந்தன் நித்தியானந்தன், அமல்ராஜ் ஜெயக்குமார், தேவராசா கஜன், மனோஜ் பிரசன்னா, ரொனிஸ்டன் ஆண்டனிஸ் உதஜகுமாரன், ராஜசேகர் ராமகிருஷ்ணன், சசீஸ்கண்ணா நடராஜா, சேனவிரத்ன பண்டார, விதுரா விவேகானந்தன், மற்றும் நாகரத்தினம் சாண்டில்யன் ஆகியோர் கொண்ட அணியே மேற்படி பிரச்சார நடவடிக்கையை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்லும் இளைஞர்களுக்கு இது மற்றொரு வெற்றி.



# ?????? ?????????? ????????? ????
# ?????? ???????!




மனிதப் புதைக்குழி ஆதாரங்களை அரசாங்கம் இல்லாது செய்ய முயற்சிக்கலாம் என கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது சங்கத்தினரால் இன்று ஊடக சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மனிதப் புதைகுழி ஆதாரங்களை அரசாங்கம் இல்லாது செய்ய முயற்சிக்கும் என்பதால், சர்வதேசம் இந்த விடயத்தில் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

ஆதாரங்களை மூடி மறைக்கும் செயற்பாடுகளுக்கு ஆயுதப்படையினரின் உதவியும் இருக்கலாம். அதனால் இந்த விடயத்தில் சரியானதொரு தீர்வு பெறப்பட வேண்டும்.

சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவேனும் இந்தப் புதைகுழி தொடர்பான விடயங்களை மூடிமறைத்து அழிப்பதற்கு முயற்சிகளை எடுக்கலாம்.

எனவே இந்த விடயத்தில் புலம்பெயர் நாடுகளில் உள்ள உறவுகள் மாத்திரமன்றி மனிதநேயமுள்ள அனைத்து நாடுகளும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும்.

சர்வதேச நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் இந்த அகழ்வு நடவடிக்கைகளில் பங்களிப்புச் செய்ய வேண்டும்” என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

---

# ????????? ???????????? ?????? ????????? ???????? ????????

???????????????? ???????????? ??????????????????? ?????????????????? ???????????????????? ??????????? ???????????????????? ????????? ?????????? ??????? ?????????? ?.??. ???? ???????? ???????? ????????? ???? ???????????? ????????????

காணாமற்போனவர்களின் குடும்பங்கள், சிறிலங்காவின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள், சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து இக்கோரிக்கையினை விடுத்துள்ளார்கள். தன்னுடைய உறுப்பு நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான ஆய்வு வரிசையில் சிறிலங்கா தொடர்பான ‘உலகளாவிய காலரீதியான மீளாய்வு’ எதிர்வரும் யூலை 10ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற அன்றைய தினம் சிறிலங்கா ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு தொடர்பிவில் விசாரணைசெய்யுமாறு மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளிடம் இம்மூன்று அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.




சிறிலங்காவானது கடந்த காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை மேற்கொள்வதுடன், நம்பிக்கையானதும் அனைவரையும் உள்ளடக்கியதுமான நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்க பொறிமுறை ஒன்றினை உருவாக்க வேண்டிய தேவையையும் கொண்டுள்ளது என நெதர்லாந்து, ஜேர்மனி, நியூசிலாந்து, நோர்வே, அவுஸ்ரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளால் இம்மீளாய்வுக்கு பரிந்துரைகளை வழங்கியுள்ளன.

'சர்வதேச சமூகத்தின் இந்த கரட்டையும் தடியையும் காட்டும் அணுகுமுறைகாரணமாக, பல வருடங்களான நடந்துவந்த அரச குற்றச்செயல்களுக்கு நீதியினை வழங்கமாட்டாத வழியினையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எடுக்குமளவிற்குத் துணிவைப் பெற்றுள்ளார் என்பதையே இப்பரிந்துரைகளை நிராகரித்தமையானது தெளிவாகக் காட்டுகின்றது. மேலும், ரணில் விக்கிரமசிங்காவால் முன்மொழியப்பட்டுள்ள இந்த உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவானது, காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் போன்ற முன்னைய அமைப்புக்களைப் போலவே, எண்ணிலடங்காப் பாதிக்கப்பட்டவர்களதும் அவர்களது குடும்பங்களதும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்யப்போவதில்லை. குறிப்பாக முன்னைய போர்ப்பிரதேசத்தில் புதிதாக மனிதப் புதைகுழி ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட நேரத்தில், பாதிக்கப்பட்டவர்களதும் அவர்களது குடும்பங்களதும் ஆதங்கங்கள் இன்னமும் அதிகரித்துள்ளன' என சிறிலங்காவின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பைச் சேர்ந்த பாஷன அபேயவர்த்தன கூறியுள்ளார்.

'குற்றவியல் பொறுப்புக்கூறல்களுக்குப் பதிலாக, உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு ஒன்றினை உருவாக்குவது, சிறிலங்கா அங்கத்துவம் வகிக்கும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுதல் தொடர்பான உடன்படிக்கை, மற்றும் தண்டனை விலக்களிப்புக்களை முறியடிப்பதற்கான புதுப்பிக்கப்பட்ட கோட்பாடுகள் உள்ளிட்ட ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச விதிமுறைகளதும் நியமங்களதும் தெளிவான மீறலாகவே இருக்கப்போகின்றது' என ITJP யின் யஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

'கட்டமைப்பு மாற்றம் உள்ளிட்ட உண்மை, நீதி, பரிகாரங்கள், நினைவுச்சின்னங்கள், மீண்டும் நிகழமாட்டாது

என்பதற்கான உத்தரவாதங்கள் என்பவற்றை வழங்கான இன்னுமொரு ஆணைக்குழு எங்களுக்குத் தேவையில்லை. சிறிலங்காவின் சர்வதேச மற்றும் உள்ளூர் கடப்பாடுகளை விட்டுக்கொடுக்கும் எந்தவொரு உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவுக்கு ஆதரவினை வழங்கவேண்டாம் என நாங்கள் மனித உரிமைகள் சபை உறுப்புநாடுகளைக் கேட்டுக்கொள்கின்றோம்.' என காணாமற்போன குடும்பங்கள் அமைப்பின் பிறிற்றோ பெர்ணாண்டோ கூறினார்.

இது தொடர்பாக இவ்வமைப்புக்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பின் முழுவடிவத்தினை கீழே காணலாம்.